550/3, Dr Nanjappa Road, Gandhipuram, Coimbatore - 641012
☎ 99941 46662 / 99944 27714

SHANMUGAM IAS ACADEMY

# ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான தொடக்கக் கால எழுச்சிகள் – தமிழ்நாடு

## முந்தைய ஆண்டு வினாக்கள் (2020 – 2026)

TNPSC குரூப் 1, 2, 4 மற்றும் பிற தேர்வுகள் · விடைகள் மற்றும் விளக்கங்களுடன்

**56 வினாக்கள்**

www.shanmugamiasacademy.in

ஒவ்வொரு வினாவின் தொடக்கத்திலும் [ ] அடைப்பில் தேர்வுப் பெயரும் ஆண்டும் கொடுக்கப்பட்டுள்ளன. முதலில் விடைகளைப் பார்க்காமல் முயன்று, பின் பகுதியில் உள்ள விடைகளுடன் சரிபார்க்கவும்.

## வினாக்கள்

**1.** VAS-AHGS-2020 **பூலித்தேவனால் தோற்கடிக்கப்பட்ட ஆங்கில தளபதி யார்?**

**(A)** ஜெனரல் அலெக்சாண்டர் ஹெரான்
**(B)** ஜெனரல் ஷெப்பர்டு
**(C)** ஜெனரல் மெக்காலே
**(D)** ஜெனரல் வாட்சன்

**2.** PTGS-2021 **கீழ்கண்டவற்றில் வேலு நாச்சியார் குறித்த சரியான கூற்று எது?**
**(i) தாண்டவராயன் பிள்ளை தளவாய் மற்றும் பிரதானியாக வேலு நாச்சியாரிடம் பணிபுரிந்தார்**
**(ii) வேலு நாச்சியார் கணவர் முத்து வடுக உடைய தேவரை பிரிட்டிஷ் படை காளையார் கோவில் போரில் கொன்றது**
**(iii) பெரிய மருது வேலு நாச்சியாருக்கு படைத் தலைவராக இருந்தார்**
**(iv) மருது சகோதரர்கள் திருச்சி பிரகடனத்தை வெளியிட்டனர்**

**(A)** (i) சரி; (ii), (iii), (iv) தவறு
**(B)** (i) மற்றும் (ii) சரி; (iii) மற்றும் (iv) தவறு
**(C)** (i), (ii), (iii) சரி; (iv) மட்டும் தவறு
**(D)** (i), (ii), (iii), (iv) சரி

**3.** AHGS-2021 **கீழ்கண்டவற்றில் வேலு நாச்சியார் பற்றி தவறான கூற்று எது?**
**I. இவர் ராமநாதபுரம் இளவரசி ஆவார்**
**II. இவருடைய கணவர் முத்து வடுக உடைய தேவர்**
**III. 1780-ல் ஹைதர் அலி சிவகங்கையின் மீது படை எடுத்து வேலு நாச்சியாரை தோற்கடித்தார்**
**IV. இவர் இரண்டாம் மைசூர் போரை பயன்படுத்தி சிவகங்கைக்குள் நுழைந்தார்**

**(A)** (I) மட்டும்
**(B)** (II) மட்டும்
**(C)** (III) மட்டும்
**(D)** (IV) மட்டும்

**4.** AHGS-2021 **கூற்று (A): தென்னிந்திய புரட்சி மிக பயங்கரமாக தோல்வியுற்றது.**
**காரணம் (R): தலைவர்களிடையே ஒற்றுமை இல்லாமல் இருந்தது.**

**(A)** (A) சரி, (R) தவறு
**(B)** (A) சரி, (R), (A)-யின் சரியான விளக்கமல்ல
**(C)** (A), (R) இரண்டும் தவறு
**(D)** (A) சரி, (R), (A)-யின் சரியான விளக்கம்

550/3, Dr Nanjappa Road, Gandhipuram, Coimbatore - 641012
☎ 99941 46662 / 99944 27714

**5.** ADGS-2021 **கீழ்க்கண்ட கூற்றுகளில் வீரபாண்டிய கட்டபொம்மன் பற்றிய சரியான கூற்றுகள் எவை?**

**1. கட்டபொம்மன் திருவாங்கூர் மன்னர் ஆவார்**

**2. ஆங்கிலேயர்கள் அவரைப் பிடித்து தூக்கிலிட்டனர்**

**3. பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக இருந்தார்**

**4. புரட்சிக்குப் பின் அவருடைய ஆட்சிப்பகுதியை பெற்றுக்கொண்டார்**

**(A)** 1 மற்றும் 2
**(B)** 2 மற்றும் 3
**(C)** 3 மற்றும் 4
**(D)** 4 மற்றும் 1

---

**6.** PSHY-2022 **மருது சகோதரர்களின் பிரகடனம் ______ சுவரில் ஒட்டப்பட்டது?**

**(A)** திருச்சிக் கோட்டை
**(B)** சிவகங்கை கோட்டை
**(C)** காளையார் கோவில் கோட்டை
**(D)** நெற்கட்டும் செவல் கோட்டை

---

**7.** VCGS-2022 **ஆங்கிலேயர்களுக்கு எதிராக "தென்னிந்திய கூட்டணியை" ஏற்படுத்தியவர்**

**(A)** மருது பாண்டியன்
**(B)** சிவசுப்ரமணியன்
**(C)** கட்டபொம்மன்
**(D)** ஊமைத்துரை

---

**8.** TNPSC-2022 **கீழ்க்கண்டவற்றை கால வரிசைப்படுத்தி விடையை தேர்ந்தெடு:**

**1. வேலூர் கலகம்**

**2. கட்டபொம்மனை தூக்கிலிடுதல்**

**3. பழனி சதித்திட்டம்**

**4. பாண்டிச்சேரி உடன்படிக்கை**

**(A)** 1, 2, 3, 4
**(B)** 4, 3, 2, 1
**(C)** 2, 3, 4, 1
**(D)** 4, 2, 3, 1

---

**9.** TNPSC-2022 **நீதிக்கட்சியின் முக்கியமான நோக்கம் எது?**

**(A)** முஸ்லீம் லீக்கிற்கு எதிராகப் போராடுதல்
**(B)** அரசுப் பணிகளில் பிராமணர் அல்லாதவர்களை பங்கேற்கச் செய்தல்
**(C)** ஜமீன்தார்களின் சர்வாதிகாரத்திலிருந்து விவசாயிகளை காப்பாற்றுதல்
**(D)** பொதுப் பிரச்சனை பற்றி விவாதித்தல்

---

**10.** Surveyor Draftsman-2022, Reporter-2022 **பின்வருவனவற்றுள் எவை, 1806-ஆம் ஆண்டு நடைபெற்ற வேலூர் சிப்பாய் கலகத்திற்கான காரணங்கள் ஆகும்?**

**(A)** மிருகங்களின் கொழுப்பு பூசப்பட்ட தோட்டாக்கள், குறைவான சம்பளம், புதிய வகை தலைப்பாகை, சாதிக்குறியீடுகள் மற்றும் காதணிகள், சுத்தமாக தாடியை மழித்தல்

**(B)** பதவி உயர்வின்மை, கடினமான தண்டனை, குறைவான சம்பளம், புதிய வகை தலைப்பாகை, சுத்தமாக தாடியை மழித்தல்

**(C)** மிருகங்களின் கொழுப்பு பூசப்பட்ட தோட்டாக்கள், பதவி உயர்வின்மை, புதிய வகை தலைப்பாகை, குறைவான சம்பளம், சுத்தமாக தாடியை மழித்தல்

**(D)** பதவி உயர்வின்மை, குறைவான சம்பளம், புதிய வகை தலைப்பாகை, சாதிக்குறியீடுகள் மற்றும் காதணிகள், சுத்தமாக தாடியை மழித்தல்

---

**11.** Surveyor Draftsman-2022 **இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் பெண்ணரசி**

**(A)** குயிலி

**(B)** வேலு நாச்சியார்

**(C)** ராணி மங்கம்மாள்

**(D)** ராணி இலட்சுமி பாய்

---

**12.** TNPSC-2022 **சரியான விடையைத் தெரிவு செய்க:**

**(i) சிவகங்கையின் 'இராணி' வேலு நாச்சியார் ஆவார்.**

**(ii) காளையார் கோவில் போரில் கொல்லப்பட்ட முத்து வடுகநாதர் இராணி வேலு நாச்சியாரின் கணவராவார்.**

**(iii) வேலு நாச்சியாரின் நம்பிக்கைக்குரிய படைத் தளபதி குயிலி இவர் முதல் தற்கொலைப் படை வீரர் ஆவார்.**

**(iv) மருது சகோதரர்களின் உதவியுடன் வேலு நாச்சியார் மீண்டும் இராணியாக முடி சூட்டிக் கொண்டார்.**

**(A)** (i), (ii) மற்றும் (iv) சரியானவை

**(B)** (i), (iii) மற்றும் (iv) சரியானவை

**(C)** (ii) மற்றும் (iii) சரியானவை

**(D)** அனைத்தும் சரியானவை

---

**13.** EO-2022 **பாஞ்சாலங்குறிச்சி கோட்டையின் மீது தாக்குதல் தொடுத்தவர் _______ ஆவார்.**

**(A)** ஜாக்சன்

**(B)** மேஜர் பேனர்மேன்

**(C)** ஜெனரல் மலார்டிக்

**(D)** ஜெனரல் பாஸ்காவென்

---

**14.** AEGS-2022 **மருது பாண்டியனின் தலைமையிடம் எது?**

**(A)** அறந்தாங்கி

**(B)** ஒக்கூர்

**(C)** பரமக்குடி

**(D)** சிறுவயல்

---

**15.** AEGS-2022 **வேலூர் கலகத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இராணுவ தளபதி யார்?**

**(A)** ஜார்ஜ் கார்மிகேல் ஸ்மித்

**(B)** ரோலோ கில்லஸ்பி

**(C)** ஜான் நிக்கல்சன்

**(D)** வில்லியம் ஹாட்சன்

**16.** Group 1-2022 **கீழ்கண்ட காரணிகளில் தென்னிந்திய கிளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது எது?**
**(i) பாளையங்களில் கம்பெனியின் சீர்திருத்தங்கள்**
**(ii) கம்பெனி பொருளாதார சுரண்டல் மற்றும் அதிகபடியான வரி விதிப்பு**
**(iii) 1798 ல் ஏற்பட்ட பஞ்சம்**
**(iv) கம்பெனி நடத்திய அடிக்கடியான போர்கள்**

**(A)** (i) மட்டும் **(B)** (ii) மட்டும்
**(C)** (iii) மட்டும் **(D)** (i), (ii), (iii), (iv)

**17.** ACF-2023 **ஆங்கிலேயர்களுடன் சண்டையிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம்**

**(A)** கயத்தாறு **(B)** நாகலாபுரம்
**(C)** புதுக்கோட்டை **(D)** பாஞ்சாலங்குறிச்சி

**18.** Combined Statistical & SI Fishery-2023 **சிவசுப்பிரமணியனார் 1799 செப்டம்பர் 13 ஆம் நாள் தூக்கிலிடப்பட்ட இடம்**

**(A)** கயத்தாறு **(B)** நாகலாபுரம்
**(C)** விருப்பாட்சி **(D)** பாஞ்சாலங்குறிச்சி

**19.** Fishery Inspector-2023 **பாளையக்காரர்களை அவர்களின் ஆட்சிப் பகுதிகளோடு சரியாகப் பொருத்துக:**
**(a) கட்டபொம்மன் - 1. திண்டுக்கல்**
**(b) கோபால நாயக் - 2. கோயம்புத்தூர்**
**(c) மருதுபாண்டியன் - 3. பாஞ்சாலங்குறிச்சி**
**(d) கேரள வர்மா - 4. சிவகங்கை**

**(A)** 3 4 2 1 **(B)** 2 4 1 3
**(C)** 3 1 4 2 **(D)** 2 1 4 3

**20.** Fishery Inspector-2023 **நபர்களை இடங்களுடன் பொருத்துக:**
**(a) ஊமைத்துரை - 1. ஓடாநிலை**
**(b) மருது சகோதரர்கள் - 2. திருமயம்**
**(c) அழகுமுத்துக் கோன் - 3. காளையார் கோவில்**
**(d) தீரன் சின்னமலை - 4. கட்டாலங்குளம்**

**(A)** 3 2 4 1 **(B)** 2 3 4 1
**(C)** 4 1 2 3 **(D)** 1 2 3 4

**21.** JRO & AP (Psychology)-2023 **1857 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு முந்தைய மற்றும் மிகவும் பிரபலமான கலகங்களில் முதன்மையானது எது?**

**(A)** பூர்வீக காலாட்படை கலகம் (1824) **(B)** வேலூர் இந்திய சிப்பாய்கள் கலகம் (1806)
**(C)** ஷோலாப்பூர் கலகம் (1838) **(D)** அசாம் சிப்பாய் கலகம் (1824)

**22.** Road Inspector-2023 **சரியான கூற்றைத் தேர்வு செய்க.**
**கூற்று (A): புலித்தேவர், ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற முயன்றார்.**
**காரணம் (R): மராத்தியர்களோடு ஏற்கனவே தொடர் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் ஹைதர் அலியால் புலித்தேவருக்கு உதவமுடியாமல் போனது.**

**(A)** கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி எனினும் காரணம் (R) கூற்று (A)க்கான சரியான விளக்கம் இல்லை
**(B)** கூற்று (A) மற்றும் காரணம் (R) ஆகிய இரண்டுமே தவறானவை
**(C)** கூற்று (A) மற்றும் காரணம் (R) ஆகியவை சரி, காரணம் (R) கூற்று (A)வை சரியாகவே விளக்குகிறது
**(D)** கூற்று (A) தவறானது, காரணம் (R) சரியானது

**23.** CESS-2023, CESGS-2023 **பொருத்துக:**
**(a) கட்டபொம்மன் - 1. கர்னல் பான் ஜோர்**
**(b) மருது சகோதரர்கள் - 2. கேப்டன் கேம்ப்பெல்**
**(c) யூசுப்கான் - 3. காலின் மெக்காலே**
**(d) முத்துவடுகர் - 4. பானெர்மென்**

**(A)** 2 3 1 4
**(B)** 3 2 1 4
**(C)** 2 4 1 3
**(D)** 4 3 2 1

**24.** DEO-2023 **பட்டியல் I இல் உள்ளதை பட்டியல் II உடன் பொருத்துக:**
**(a) புலித் தேவர் - 1. சிறுவயல்**
**(b) மருது சகோதரர்கள் - 2. திண்டுக்கல்**
**(c) கோபால நாயக்கர் - 3. ஆனைமலை**
**(d) யாதுல் நாயக்கர் - 4. நெற்கட்டும்செவல்**

**(A)** 1 2 3 4
**(B)** 4 1 2 3
**(C)** 4 2 1 3
**(D)** 1 3 2 4

**25.** JSO-2023 **கீழ்க்காண்பவைகளில் கட்டபொம்மனைப் பற்றிய தகவல்களில் எவை சரியானவை?**
**(i) ஜாக்சன் இராமநாதபுரத்தில் உள்ள இராமலிங்க விலாசில் கட்டபொம்மனை சந்திக்க இசைந்தார்**
**(ii) கட்டபொம்மன் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார்**
**(iii) இவர் களக்காடு போரில் தோற்கடிக்கப்பட்டார்**
**(iv) இவர் வேலுநாச்சியாரின் சகோதரர் ஆவார்**

**(A)** (iv) மட்டும் சரி
**(B)** (ii) மற்றும் (iii) சரி
**(C)** (iii) மற்றும் (iv) சரி
**(D)** (i) மற்றும் (ii) சரி

**26.** ATO (Textile)-2023 **கூற்று [A]: சிவகிரி கோட்டைத் தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பானதாக இருந்தது.**
**காரணம் [R]: மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் வலுவான அரண்களோடு அது அமைக்கப்பட்டிருந்தது.**

**(A)** கூற்று [A] சரி, காரணம் [R] கூற்று [A]க்கு சரியான விளக்கமல்ல
**(B)** கூற்று [A] மற்றும் காரணம் [R] தவறானவை
**(C)** கூற்று [A] சரி, காரணம் [R] கூற்று [A]க்கு சரியான விளக்கம் ஆகும்
**(D)** கூற்று [A] தவறு, காரணம் [R] சரி

---

**27.** ATO (Textile)-2023 **தவறான கூற்றினைத் தேர்வு செய்க:**
**(i) வேலு நாச்சியார் இராமநாதபுரம் அரசரான செல்லமுத்து சேதுபதியின் மகள் ஆவார்.**
**(ii) விஜயநகரத்தில் அறிமுகமான தங்க நாணயம் பகோடா எனப்பட்டது.**
**(iii) மருது சகோதரர்கள் 1801 இல் 'திருச்சிராப்பள்ளி பேரறிக்கையை' வெளியிட்டனர்.**
**(iv) 1761, மே 16 நாள் புலித்தேவனின் முக்கியமான மூன்று கோட்டைகளான நெற்கட்டும்செவல், இராமநாதபுரம், சாத்தூர் மருது சகோதரர்கள் வசமாயின.**

**(A)** (i) மற்றும் (ii)
**(B)** (ii) மற்றும் (iv)
**(C)** (i) மற்றும் (iii)
**(D)** (iv) மட்டும்

---

**28.** Junior Analyst-2023 **1806-ல் வேலூர் கலகம் நடந்த போது சென்னை மாகாணத்தின் கவர்னராக இருந்தவர் யார்?**

**(A)** வில்லியம் மேடோஸ்
**(B)** சர் சார்லஸ் ஓக்காலே
**(C)** வில்லியம் பெண்டிங்
**(D)** சர் ஜார்ஜ் பார்லோ

---

**29.** Junior Analyst-2023 **கீழே கொடுக்கப்பட்ட தென்னிந்திய புரட்சிக்கான பொருளாதார காரணங்களில் எது தவறு என்பதை எழுதுக.**
**(i) திண்டுக்கல்லில் 25% அதிகமாக வரி உயர்த்தப்பட்டது**
**(ii) 50% வரி மக்களின் நலனுக்கு உபயோகப்படுத்தப்பட்டது**
**(iii) பிரிட்டிஷார் மன்னர்களிடம் கடன் பெற்றனர்**
**(iv) 1798ல் அங்கே கடுமையான பஞ்சம் ஏற்பட்டது**

**(A)** (i) மற்றும் (ii) சரி (iii) மற்றும் (iv) தவறு
**(B)** (iii) மற்றும் (iv) சரி (i) மற்றும் (ii) தவறு
**(C)** (i) மற்றும் (iv) சரி (ii) மற்றும் (iii) தவறு
**(D)** (ii) மற்றும் (iii) சரி (i) மற்றும் (iv) தவறு

---

**30.** HR&CE EO Grade I-2024 **பின்வருவனவற்றுள் சரியாக பொருத்தப்படாததை கூறுக.**
**1. SIPA - தென்னிந்திய மக்கள் சங்கம்**
**2. SILF - தென்னிந்திய சட்ட கூட்டமைப்பு**
**3. AMS - ஆந்திரா மகா சபை**
**4. MPA - மதராஸ் மாகாண சட்டசபை**

**(A)** 1 மற்றும் 2ம் தவறு
**(B)** 2 மற்றும் 3ம் தவறு
**(C)** 2 மற்றும் 4ம் தவறு
**(D)** 1 மற்றும் 4ம் தவறு

---

**31.** Hostel Superintendent-2024 **'ஓடாநிலை'-யில் ஆங்கிலேயருக்கு எதிராக கொரில்லாப் போர்முறையை கையாண்டவர் ______**

**(A)** சிவகிரி பாளையக்காரர்
**(B)** தீரன் சின்னமலை
**(C)** ஊமைத்துரை
**(D)** மருது சகோதரர்கள்

---

**32.** Hostel Superintendent-2024, GSASO-2020, Group 1-2022 **திருச்சிராப்பள்ளி பிரகடனம் வெளியிட்டவர்**

**(A)** வேலு நாச்சியார்
**(B)** ராணி மங்கம்மாள்
**(C)** வீரபாண்டிய கட்டபொம்மன்
**(D)** மருது சகோதரர்கள்

---

**33.** AAO & AHO-2024 **1806-ஆம் ஆண்டு நடந்த வேலூர் புரட்சியின் பின் விளைவுகள் பற்றி கூறப்படும் பின்வரும் கூற்றுகளில் எது 'சரியானது அல்ல'?**

**(A)** திப்புவின் மகன்களை கல்கத்தாவுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது
**(B)** கர்னல் ஜில்லஸ்பிக்கு 7000 பகோடாக்கள் வெகுமதியாக அளிக்கப்பட்டது
**(C)** வில்லியம் பெண்டிங் இங்கிலாந்துக்கு திருப்பி அழைக்கப்பட்டார்
**(D)** புதிய இராணுவ விதிமுறைகள் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டது

---

**34.** Group 4-2024 **பின்வரும் கூற்றுகளில் தீரன் சின்னமலையைப் பற்றிய சரியான கூற்று எது?**
**(i) தீரன் சின்னமலை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் போரிட்ட கொங்கு நாட்டு பாளையக்காரர் ஆவார்.**
**(ii) இவர் பிரெஞ்சுக்காரர்களாலும், திப்புவாலும் பயிற்சி அளிக்கப்பட்ட பாளையக்காரர் ஆவார்.**
**(iii) 1800 லிருந்து அவர் தூக்கிலிடப்பட்ட 1805 ஜூலை 31 வரை பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராகப் போராடினார்.**

**(A)** (i) மட்டும்
**(B)** (i) மற்றும் (iii) மட்டும்
**(C)** (i) மற்றும் (ii) மட்டும்
**(D)** (ii) மற்றும் (iii) மட்டும்

---

**35.** Group 2/2A-2024 **———— ன் இயற்பெயர் குமாரசாமி நாயக்கர்.**

**(A)** கட்டபொம்மன்
**(B)** ஊமைத்துரை
**(C)** தீரன் சின்னமலை
**(D)** மருது பாண்டியர்

---

**36.** Group 1-2024 **“வலிமையான எதிரியின் முன் அடிபணிதலின் பாசாங்கும் சரணடைதலின் ஒத்திவைப்பு” என்ற பழமொழியின்படி ஆங்கிலேயருக்கு எதிரான பாளையக்காரர் கூட்டமைப்புக்கு வழிகாட்டிய நூல்**

**(A)** மகாபாரதம்
**(B)** இராமாயணம்
**(C)** பஞ்சதந்திரம்
**(D)** சிலப்பதிகாரம்

---

**37.** CTSE (ITI)-2024 **பின்வரும் தமிழ்நாட்டு பாளையக்காரர்களுள் ஆங்கில ஆட்சியை எதிர்த்ததில் முன்னோடியானவர் யார்?**

**(A)** கட்டபொம்மன்
**(B)** மருது சகோதரர்கள்
**(C)** வேலு நாச்சியார்
**(D)** புலித்தேவர்

**38.** Special Competitive Exam-2025 **பாளையம் என்ற சொல் ஒரு பகுதியையோ ஒரு இராணுவ முகாமையோ அல்லது ஒரு சிற்றரசையோ குறிப்பதாகும்**

**(i) இவ்வமைப்பின் கீழ் தனிநபர் ஒருவர் ஆற்றிய சீரிய இராணுவ சேவைக்காக அவரின் கட்டுப்பாட்டின் கீழ் பாளையம் கொடுக்கப்பட்டது**

**(ii) வாரங்கலை சார்ந்த பிரதாபருத்ரனின் ஆட்சிக் காலத்தில் காகதீய அரசில் இப்பாளையக்காரர் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.**

**(iii) மதுரை நாயக்கராக 1529 ல் பதவியேற்ற விஸ்வநாத நாயக்கர் அவர் தம் அமைச்சரான அரியநாதரின் உதவியோடு தமிழகத்தில் இம்முறையை அறிமுகப்படுத்தினார்.**

**(iv) பரம்பரை பரம்பரையாக 92 பாளையக்காரர்கள் இருந்திருக்கக்கூடும்.**

**(A)** (i), (iii) மற்றும் (iv) சரி
**(B)** (ii), (iii) மற்றும் (iv) சரி
**(C)** (i), (ii) மற்றும் (iii) சரி
**(D)** (i) மற்றும் (iii) சரி

---

**39.** TNPSC-2025 **பின்வருவனவற்றில் எவை தமிழ்நாட்டில் காலனித்துவ எதிர்ப்பிற்காக நடைபெற்ற போராட்டம் இல்லை?**

**(A)** தென்னிந்தியப் புரட்சி
**(B)** பெரும் புரட்சி
**(C)** முதல் பாளையக்காரர்கள் புரட்சி
**(D)** வேலூர் கலகம்

---

**40.** TNPSC-2025 **தவறான கூற்றுகளைத் தேர்வு செய்க.**

**(1) தீர்த்தகிரி என்பது தீரன் சின்னமலையின் உண்மையான பெயராகும்**

**(2) இவரின் வீரத்தைப் பாராட்டி 'தீரன் சின்னமலை' என்று திப்பு சுல்தானால் அழைக்கப்பட்டார்**

**(3) திப்புவின் இறப்பிற்குப் பின் 'ஓடாநிலை' என்ற இடத்தில் ஒரு கோட்டையைக் கட்டினார்**

**(4) 1805 ஜூலை 31 அன்று சிவமலையின் உச்சியில் சின்னமலை தூக்கிலிடப்பட்டார்**

**(A)** (1) மற்றும் (2)
**(B)** (2) மற்றும் (3)
**(C)** (3) மற்றும் (4)
**(D)** (2) மற்றும் (4)

---

**41.** Group 1/1A-2025 **கூற்று [A] : ஆங்கிலேய கம்பெனியாளர்கள் வீரபாண்டியக் கட்டபொம்மனை இராமநாதபுரத்து ஆட்சியாளரின் அலுவலகத்தில் ஆஜராகுமாறு கேட்டுக்கொண்டார்.**

**காரணம் [R] : ஆங்கிலேய கம்பெனியாருக்கு கட்ட வேண்டிய கப்பம் நிலுவையில் இருப்பதால் ஆட்சியாளரை சந்திக்குமாறு கட்டபொம்மன் கேட்டுக்கொள்ளப்பட்டார்.**

**(A)** [A] சரி, [R] சரி
**(B)** [A] மற்றும் [R] இரண்டும் தவறு
**(C)** [A] மற்றும் [R] இரண்டும் சரி; [R] என்பது [A]-க்கான சரியான விளக்கம்
**(D)** [A] மற்றும் [R] இரண்டும் சரி; [R] என்பது [A]-க்கான சரியான விளக்கம் அல்ல

---

**42.** Group 4-2025 **கீழ்கண்ட கூற்றுகளை கருத்தில் கொண்டு தவறான விடையை கண்டறி.**
**(1) 1798 செப்டம்பர் 1 அன்று மேஜர் பானர்மேன் தன்னைக் கட்டபொம்மன் பாளையங்கோட்டையில் சந்திக்கும்படி இறுதி எச்சரிக்கை விடுத்தார்.**
**(2) கட்டபொம்மனின் கோட்டை 500 அடி நீளத்திலும் 300 அடி அகலத்திலும் முழுவதும் மண்ணினால் கட்டப்பட்டிருந்தது.**
**(3) 1799 செப்டம்பர் 16 அன்று பானர்மேன் கட்டபொம்மனை கயத்தாறு என்னுமிடத்தில் பாளையக்காரர்கள் கூடியிருந்த அவையில் விசாரணை செய்தார்.**
**(4) 1799 ஜூன் 1 அன்று கட்டபொம்மன் 500 ஆட்களுடன் சிவகங்கை சென்றார்.**

(A) (1) தவறு
(B) (2) தவறு
(C) (1) மற்றும் (3) தவறு
(D) (2) மற்றும் (4) தவறு

**43.** CTSE (IV Post)-2025 **சரியான விடையை தேர்ந்தெடுக்க**
**மருதுபாண்டியனின் தாயார் பெயர்**

(A) வேலாச்சி
(B) சண்முக கனியம்மாள்
(C) முத்தம்மாள்
(D) பொன்னாத்தாள்

**44.** CTSE (ITI Post)-2025 **கீழ்கண்ட கூற்றுகளில் சரியானதை தேர்வு செய்யவும்.**
**(I) வீரபாண்டிய கட்டபொம்மன் 1799 அக்டோபரில் கயத்தாறு என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்**
**(II) ஊமைத்துரை 1801 நவம்பரில் பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டார்**
**(III) மருதுசகோதரர்கள் 1801 அக்டோபரில் திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர்**
**(IV) தீரன் சின்னமலை 1806 ஜூலையில் சங்ககிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்**

(A) (I) மற்றும் (III)
(B) (I) மற்றும் (II)
(C) (I), (II) மற்றும் (III)
(D) மேற்கண்ட அனைத்தும்

**45.** CTSE (ITI Post)-2025 **கூற்று [A] : முகமது ஹாசம் தென்னிந்தியப் புரட்சியின்போது புரட்சியணித் தலைவர்களின் கடிதங்களை அழித்துவிட்டு 1800 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் நாள் தமது குரல்வளையைத் தாமே அறுத்துத் தற்கொலை செய்துகொண்டு புரட்சி அணியின் முதல் தியாகியானார்.**
**காரணம் [R] : முகமது ஹாசம் கைது செய்யப்பட்டு சதித்திட்டம் பற்றிய விவரத்தை அவரிடமிருந்து பெற வேண்டும் என்ற முடிவுடன் ஆங்கிலேயர்கள் அவரை துன்புறுத்தினர்.**

(A) கூற்று சரி, காரணம் தவறு
(B) கூற்று, காரணம் இரண்டும் சரி, மற்றும் காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.
(C) கூற்று தவறு, காரணம் சரி
(D) கூற்று காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை என்பது சரி

**46.** Group 2/2A-2025 **பின்வருவனவற்றுள் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?**

**(i) கோபால நாயக் – திண்டுக்கல்**

**(ii) தூண்டாஜி வாக் – மதுரை**

**(iii) மருதுபாண்டியர்கள் – எட்டயபுரம்**

**(iv) புலித்தேவன் – நெற்கட்டாஞ்செவல்**

**(A)** (i) மற்றும் (ii) மட்டும்
**(B)** (ii) மற்றும் (iii) மட்டும்
**(C)** (iii) மற்றும் (iv) மட்டும்
**(D)** (iv) மட்டும்

---

**47.** Group 2/2A-2025 **பின்வரும் நிகழ்வுகளைக் கால வரிசைப்படி முறைப்படுத்துக.**

**(1) சட்ட மறுப்பு இயக்கம்**

**(2) சிப்பாய் கலகம்**

**(3) வேலூர் கலகம்**

**(4) தென்னிந்தியப் புரட்சி**

**(A)** (2), (3), (1), (4)
**(B)** (1), (2), (4), (3)
**(C)** (4), (2), (3), (1)
**(D)** (4), (3), (2), (1)

---

**48.** GROUP 2 & 2A-2025 **பின்வரும் கூற்று மற்றும் காரணத்தைப் படித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**கூற்று [A]: 1801ம் ஆண்டில், ஆங்கிலேயர்கள் ஓர் சக்திவாய்ந்த படையுடன் சிவகங்கையைத் தாக்கினர்.**

**காரணம் [R]: 1801ம் ஆண்டில் மருது சகோதரர் சின்ன மருது ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்தார்.**

**(A)** கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு
**(B)** கூற்று [A] தவறு ஆனால் காரணம் [R] சரி
**(C)** கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி மற்றும் காரணம் [R] என்பது கூற்று [A] இன் சரியான விளக்கம்
**(D)** கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி ஆனால் காரணம் [R] என்பது கூற்று [A] இன் சரியான விளக்கம் அல்ல

---

**49.** CTS ITI LEVEL II-2025 **கீழ்க்கண்டவற்றுள் தீரன் சின்னமலை போர்கள் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு**

**(i) 1801 ஆம் ஆண்டு காவிரிக்கரையில் நடைபெற்ற போர்**

**(ii) 1802 ஆம் ஆண்டு ஓடாநிலையில் நடந்த போர்**

**(iii) 1806 ஆம் ஆண்டு நடந்த அரச்சலூர் போர்**

**(A)** (i) மட்டும் சரி
**(B)** (i) மற்றும் (iii) மட்டும் சரி
**(C)** (i) மற்றும் (ii) மட்டும் சரி
**(D)** (ii) மற்றும் (iii) மட்டும் சரி

---

**50.** CTS ITI LEVEL II-2025 **நபர்களை அவர்களுடன் தொடர்புடைய இடங்களுடன் பொருத்தவும்:**

**(a) யூசுப் கான் - (1) நெல்கட்டும் செவல்**

**(b) ஜார்ஜ் பிகாட் - (2) மதுரை ஆளுநர்**

**(c) புலித் தேவர் - (3) ராமநாதபுரம்**

**(d) வேலுநாச்சியார் - (4) மெட்ராஸ் ஆளுநர்**

(A) 2 4 1 3
(B) 2 4 3 1
(C) 2 3 4 1
(D) 1 3 2 4

---

**51.** CTS (IV POST)-2026 **வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றிய எந்தக் கூற்று(கள்) சரியானது?**

**(i) 1798, மே 31-ம் தேதிக்குள் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை 3510 பகோடாக்களாக இருந்தது**

**(ii) எஸ்.ஆர். லஷிங்டன் ஜாக்சனுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார்**

**(iii) 1798-ல் சிவகிரி பாளையக்காரர் மகனும் அவருடைய ஆலோசகர் மாப்பிள்ளை வண்ணியனும் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்று ஆலோசனை நடத்தினர்**

**(iv) சாத்தூர் பாளையக்காரர் விஜய ரகுநாத அமர், கட்டபொம்மனை கலப்பூர் காட்டுப்பகுதியில் இருந்து பிடித்து எதிரிகளிடம் ஒப்படைத்தார்**

(A) (i) மற்றும் (iv) சரி
(B) (i) மற்றும் (ii) சரி
(C) (ii) மற்றும் (iii) சரி
(D) (ii) மற்றும் (iv) சரி

---

**52.** GROUP 2A MAINS-2025 **சென்னை மாகாணத்தின் ஆளுநர் எட்வர்ட் கிளைவ் குறித்த சொற்றொடர்களில் எது/எவை தவறானது?**

(A) ஆற்காடு நவாபின் அரசைப் பறித்துக் கொண்டார்
(B) பாளையக்கார ஆட்சி முறையை ஒழித்தார்
(C) சென்னையில் தலைமை நீதிமன்றம் இவருடைய ஆட்சிக்காலத்தில் நிறுவப்பட்டது
(D) கலெக்டர் ஜாக்சன், தன்னை அவமானப்படுத்திவிட்டதாக வீரபாண்டிய கட்டபொம்மன் எழுதிய கடிதத்திற்கு எட்வர்ட் கிளைவ் ஆர்வம் காட்டவில்லை

---

**53.** GROUP 2A MAINS-2025 **கீழ்கண்டவர்களில் முத்துராமலிங்க சேதுபதிக்கு பதிலாக கிழக்கு இந்திய கம்பெனியால் ராம்நாட்டின் ஜமீன்தாராக நியமிக்கப்பட்டவர் யார்?**

(A) மங்கலேஸ்வரி நாச்சியார்
(B) மருது பாண்டியர்
(C) ராஜ உடையப்ப சேதுபதி
(D) இரண்டாம் ரகுநாத சேதுபதி

---

**54.** GROUP 2A MAINS REVOKED-2026 **தமிழகப் பாளையக்காரர்களை ஆங்கிலத் தளபதிகளுடன் சரியாகப் பொருத்துக.**

**(a) பூலித்தேவன் - 1. மெக்காலே**

**(b) கட்டபொம்மன் - 2. ஹெரான்**

**(c) ஊமைத்துரை - 3. ஹாரிஸ்**

**(d) தீரன் சின்னமலை - 4. பானர்மேன்**

(A) 1 4 3 2
(B) 2 4 1 3
(C) 2 4 3 1
(D) 3 4 2 1

**55.** GROUP 2A MAINS REVOKED-2026 **பின்வருவனவற்றுள் தீரன் சின்னமலை பற்றிய எந்த கூற்று உண்மையானது?**

**(i) இவர் கொங்குநாட்டைச் சார்ந்த பாளையக்காரர்**

**(ii) இவர் திப்பு மற்றும் பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சி அளிக்கப்பட்டார்**

**(iii) ஆங்கிலப்படையை 1802-ல் ஓடாநிலைப் போரில் எதிர்த்துப் போரிட்டார்.**

**(A)** (i) மட்டும்

**(B)** (i) மற்றும் (ii) மட்டும்

**(C)** (iii) மட்டும்

**(D)** (i), (ii) மற்றும் (iii)

---

**56.** GROUP 2A MAINS REVOKED-2026 **பின்வருவனவற்றுள் தவறான கூற்றுகள் எவை?**

**(1) பாளையக்காரர் முறையின் தோற்றம் 1585-ஆம் ஆண்டைச் சார்ந்தது**

**(2) வேலுநாச்சியார் ராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து சேதுபதியின் மகள்**

**(3) 1789 அக்டோபர் 16 அன்று கட்டபொம்மன் கயத்தாறு பழைய கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்**

**(4) தென்னிந்தியப் புரட்சி, 1801**

**(A)** (2) மற்றும் (1)

**(B)** (3) மற்றும் (4)

**(C)** (4) மற்றும் (2)

**(D)** (1) மற்றும் (3)

---

550/3, Dr Nanjappa Road, Gandhipuram, Coimbatore - 641012
☎ 99941 46662 / 99944 27714

# விடைகள் மற்றும் விளக்கங்கள்

**1.** **(A) ஜெனரல் அலெக்சாண்டர் ஹெரான்**
1755-ல் கர்னல் அலெக்சாண்டர் ஹெரானின் படையெடுப்பை நெற்கட்டும்செவலின் பூலித்தேவன் வெற்றிகரமாக எதிர்த்து முறியடித்தார்.

**2.** **(D) (i), (ii), (iii), (iv) சரி**
தாண்டவராயன் பிள்ளை பிரதானியாக இருந்தார்; 1772 காளையார்கோவில் போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார்; பெரிய மருது படைத்தளபதி; 1801-ல் மருது சகோதரர்கள் திருச்சி பிரகடனம் வெளியிட்டனர் – நான்கும் சரி.

**3.** **(C) (III) மட்டும்**
ஹைதர் அலி வேலு நாச்சியாரை தோற்கடிக்கவில்லை; மாறாக அவருக்கு படை உதவி அளித்தார். அதன் உதவியுடன் 1780-ல் அவர் சிவகங்கையை மீட்டார்.

**4.** **(D) (A) சரி, (R), (A)-யின் சரியான விளக்கம்**
1800–1801 தென்னிந்தியப் புரட்சி தலைவர்களிடையே ஒருங்கிணைப்பு இல்லாததால் ஆங்கிலேயரால் எளிதில் ஒடுக்கப்பட்டது.

**5.** **(B) 2 மற்றும் 3**
கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்; 1799 அக்டோபரில் ஆங்கிலேயர் அவரைப் பிடித்து கயத்தாறில் தூக்கிலிட்டனர்.

**6.** **(A) திருச்சிக் கோட்டை**
1801 மருது சகோதரர்களின் பிரகடனம் திருச்சிராப்பள்ளி கோட்டைச் சுவரில் ஒட்டப்பட்டதால் அது திருச்சிராப்பள்ளி பிரகடனம் எனப்படுகிறது.

**7.** **(A) மருது பாண்டியன்**
மருது பாண்டியர்கள் திண்டுக்கல், மலபார், மைசூர் உள்ளிட்ட பகுதித் தலைவர்களை இணைத்து ஆங்கிலேயருக்கு எதிராக தென்னிந்திய கூட்டணியை உருவாக்கினர்.

**8.** **(D) 4, 2, 3, 1**
பாண்டிச்சேரி உடன்படிக்கை (1754), கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டது (1799), பழனி சதித்திட்டம் (1800 தென்னிந்தியப் புரட்சிக் காலம்), வேலூர் கலகம் (1806) என்பதே சரியான வரிசை.

**9.** **(B) அரசுப் பணிகளில் பிராமணர் அல்லாதவர்களை பங்கேற்கச் செய்தல்**
1916-ல் தொடங்கப்பட்ட நீதிக்கட்சியின் முக்கிய நோக்கம் அரசுப் பணிகளிலும் சட்டமன்றங்களிலும் பிராமணர் அல்லாதோருக்கு உரிய பிரதிநிதித்துவம் பெறுவதாகும்.

**10.** **(D) பதவி உயர்வின்மை, குறைவான சம்பளம், புதிய வகை தலைப்பாகை, சாதிக்குறியீடுகள் மற்றும் காதணிகள், சுத்தமாக தாடியை மழித்தல்**
1806 வேலூர் கலகத்திற்கு பதவி உயர்வின்மை, குறைந்த சம்பளம், புதிய தலைப்பாகை, சாதிக்குறிகள் மற்றும் காதணிகள் தடை, தாடி மழிக்க உத்தரவு ஆகியவை காரணங்கள்; கொழுப்பு தடவிய தோட்டா 1857 பெரும் புரட்சியின் காரணம் ஆகும்.

**11.** **(B) வேலு நாச்சியார்**

சிவகங்கை அரசி வேலு நாச்சியார் ஆங்கிலேய காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் இந்திய அரசி ஆவார்; தமிழ் மக்கள் அவரை 'வீரமங்கை' என்று போற்றுகின்றனர்.

**12.** **(D) அனைத்தும் சரியானவை**

நான்கு கூற்றுகளும் சரி; குயிலி ஆங்கிலேய ஆயுதக் கிடங்கை அழிக்கத் தன்னைத் தானே தீ வைத்துக் கொண்டு முதல் தற்கொலைப் படை வீராங்கனை ஆனார்; 1780-ல் மருது சகோதரர்கள் உதவியுடன் வேலு நாச்சியார் மீண்டும் அரியணை ஏறினார்.

**13.** **(B) மேஜர் பேனர்மேன்**

1799 செப்டம்பரில் மேஜர் பேனர்மேன் தலைமையிலான ஆங்கிலேயப் படை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டுத் தாக்கியது.

**14.** **(D) சிறுவயல்**

மருது சகோதரர்கள் சிறுவயலைத் தலைமையிடமாகக் கொண்டு சிவகங்கைப் பகுதியை நிர்வகித்தனர்.

**15.** **(B) ரோலோ கில்லஸ்பி**

1806 வேலூர் கலகத்தை ஆற்காட்டிலிருந்து குதிரைப்படையுடன் விரைந்து வந்த கர்னல் ரோலோ கில்லஸ்பி ஒடுக்கினார்.

**16.** **(D) (i), (ii), (iii), (iv)**

பாளையங்களில் கம்பெனி சீர்திருத்தங்கள், பொருளாதாரச் சுரண்டல், கடும் வரி, 1798 பஞ்சம், அடிக்கடி நடந்த போர்கள் ஆகிய அனைத்தும் 1800–01 தென்னிந்தியக் கிளர்ச்சிக்கு வழிவகுத்தன.

**17.** **(A) கயத்தாறு**

வீரபாண்டிய கட்டபொம்மன் 1799 அக்டோபர் 16 அன்று கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார்.

**18.** **(B) நாகலாபுரம்**

கட்டபொம்மனின் அமைச்சர் தானாபதி சிவசுப்பிரமணியனார் 1799 செப்டம்பர் 13 அன்று நாகலாபுரத்தில் தூக்கிலிடப்பட்டார்.

**19.** **(C) 3 1 4 2**

கட்டபொம்மன் – பாஞ்சாலங்குறிச்சி, கோபால நாயக் – திண்டுக்கல், மருதுபாண்டியன் – சிவகங்கை, கேரள வர்மா – கோயம்புத்தூர் (மலபார்–கொங்கு பகுதி) என்பதே சரியான பொருத்தம்.

**20.** **(B) 2 3 4 1**

ஊமைத்துரை திருமயம் கோட்டையுடன் தொடர்புடையவர்; மருது சகோதரர்களின் கோட்டை காளையார் கோவில்; அழகுமுத்துக் கோன் கட்டாலங்குளத்தைச் சேர்ந்தவர்; தீரன் சின்னமலை ஓடாநிலையில் கோட்டை கட்டிப் போரிட்டார்.

**21.** **(B) வேலூர் இந்திய சிப்பாய்கள் கலகம் (1806)**

1806 ஜூலை 10 அன்று நடந்த வேலூர் சிப்பாய் கலகம், 1857 பெரும் புரட்சிக்கு முன் நடந்த மிக முந்தைய, பிரபலமான சிப்பாய் கலகமாகும்.

**22.** **(C) கூற்று (A) மற்றும் காரணம் (R) ஆகியவை சரி, காரணம் (R) கூற்று (A)வை சரியாகவே விளக்குகிறது**

புலித்தேவர் ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியை நாடினார்; ஆனால் மராத்தியர்களுடனான போரில் ஈடுபட்டிருந்ததால் ஹைதர் அலியால் உதவ முடியவில்லை. எனவே காரணம் கூற்றை விளக்குகிறது.

**23.** **(D) 4 3 2 1**

கட்டபொம்மனை பானர்மென் ஒடுக்கினார்; மருது சகோதரர்களுக்கு எதிரான போரில் காலின் மெக்காலே பங்கேற்றார்; யூசுப்கானை மதுரையில் கேம்ப்பெல் முற்றுகையிட்டார்; முத்துவடுகரின் காளையார்கோவில் மீது கர்னல் பான் ஜோர் (ஜோசப் ஸ்மித்துடன்) தாக்குதல் நடத்தினார்.

**24.** **(B) 4 1 2 3**

புலித்தேவர் – நெற்கட்டும்செவல், மருது சகோதரர்கள் – சிறுவயல், கோபால நாயக்கர் – திண்டுக்கல் (விருப்பாச்சி), யாதுல் நாயக்கர் – ஆனைமலை.

**25.** **(D) (i) மற்றும் (ii) சரி**

ஜாக்சன் கட்டபொம்மனை இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில் சந்தித்தார்; 1799 அக்டோபர் 16 அன்று கயத்தாற்றில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். களக்காடு போர் புலித்தேவருடன் தொடர்புடையது; அவர் வேலுநாச்சியாரின் சகோதரரும் அல்லர்.

**26.** **(C) கூற்று [A] சரி, காரணம் [R] கூற்று [A]க்கு சரியான விளக்கம் ஆகும்**

சிவகிரி கோட்டை மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இயற்கை அரண்களுடன் அமைந்திருந்ததால் தாக்குதலுக்கும் தற்காப்புக்கும் ஏற்றதாக இருந்தது; எனவே காரணம் கூற்றை விளக்குகிறது.

**27.** **(D) (iv) மட்டும்**

1761 மே 16 அன்று புலித்தேவரின் நெற்கட்டும்செவல், வாசுதேவநல்லூர், பனையூர் ஆகிய மூன்று கோட்டைகள் யூசுப்கான் வசமாயின; மருது சகோதரர்கள் வசம் அல்ல. மற்ற மூன்று கூற்றுகளும் சரி.

**28.** **(C) வில்லியம் பெண்டிங்**

1806 வேலூர் கலகத்தின் போது வில்லியம் பெண்டிங் பிரபு சென்னை ஆளுநராக இருந்தார்; கலகத்துக்குப் பின் அவர் இங்கிலாந்துக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.

**29.** **(C) (i) மற்றும் (iv) சரி (ii) மற்றும் (iii) தவறு**

திண்டுக்கல்லில் வரி கடுமையாக உயர்த்தப்பட்டதும் 1798 பஞ்சமும் புரட்சியின் பொருளாதாரக் காரணங்கள்; வரிப் பணம் மக்கள் நலனுக்குச் செலவிடப்படவில்லை, பிரிட்டிஷார் மன்னர்களிடம் கடன் பெறவில்லை.

**30.** **(C) 2 மற்றும் 4ம் தவறு**

SILF என்பது தென்னிந்திய சட்டக் கூட்டமைப்பு அல்ல, தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (South Indian Liberal Federation); MPA என்பது 1917இல் தொடங்கப்பட்ட சென்னை மாகாணச் சங்கம் (Madras Presidency Association), சட்டசபை அல்ல. எனவே 2 மற்றும் 4 தவறான இணைகள்.

**31.** **(B) தீரன் சின்னமலை**

தீரன் சின்னமலை ஓடாநிலையில் கோட்டை கட்டி அங்கிருந்து ஆங்கிலேயருக்கு எதிராக கொரில்லாத் தாக்குதல்கள் நடத்தினார்.

**32. (D) மருது சகோதரர்கள்**

1801 ஜூன் மாதம் மருது சகோதரர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக அனைத்து மக்களும் ஒன்றுபட அழைப்பு விடுத்து திருச்சிராப்பள்ளி பேரறிக்கையை வெளியிட்டனர்.

**33. (D) புதிய இராணுவ விதிமுறைகள் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டது**

வேலூர் புரட்சிக்குப் பின் புதிய இராணுவ விதிமுறைகள் (தலைப்பாகை, சாதிக்குறி தடை முதலியன) திரும்பப் பெறப்பட்டன; எனவே அவை தொடர்ந்து அமல்படுத்தப்பட்டன என்பது தவறு.

**34. (C) (i) மற்றும் (ii) மட்டும்**

தீரன் சின்னமலை பிரெஞ்சுக்காரர்களாலும் திப்புவாலும் பயிற்சி பெற்ற கொங்கு நாட்டுப் பாளையக்காரர்; 1800 முதல் 1805 ஜூலை 31 வரை அவர் போரிட்டது ஆங்கிலேயருக்கு எதிராகவே, பிரெஞ்சுக்காரருக்கு எதிராக அல்ல.

**35. (B) ஊமைத்துரை**

வீரபாண்டிய கட்டபொம்மனின் இளைய சகோதரரான ஊமைத்துரையின் இயற்பெயர் குமாரசாமி; பேச இயலாதவர் என்பதால் ஊமைத்துரை என அழைக்கப்பட்டார்.

**36. (C) பஞ்சதந்திரம்**

வலிய எதிரியின் முன் பணிவது போல் நடித்து சரணடைவதைத் தள்ளிப்போடும் இந்த அரசியல் தந்திர நெறி பஞ்சதந்திரக் கதைகளிலிருந்து பெறப்பட்டது; பாளையக்காரர் கூட்டமைப்பு இதனைப் பின்பற்றியது.

**37. (D) புலித்தேவர்**

நெற்கட்டும்செவல் பாளையக்காரர் புலித்தேவர் 1750களிலேயே ஆங்கிலேயரையும் நவாபையும் எதிர்த்தார்; ஆங்கில ஆட்சியை எதிர்த்த முதல் பாளையக்காரர் அவரே.

**38. (C) (i), (ii) மற்றும் (iii) சரி**

மரபுப்படி பாளையக்காரர்களின் எண்ணிக்கை 72 ஆகும், 92 அல்ல; எனவே (iv) தவறு. மற்ற மூன்று கூற்றுகளும் சரி.

**39. (B) பெரும் புரட்சி**

1857 பெரும் புரட்சி முக்கியமாக வட இந்தியாவில் நடைபெற்றது; பாளையக்காரர் புரட்சிகள், தென்னிந்தியப் புரட்சி (1800–01), வேலூர் கலகம் (1806) ஆகியவை தமிழ்நாட்டில் நடந்தவை.

**40. (D) (2) மற்றும் (4)**

‘சின்னமலை’ என்ற பெயர் சிவமலைக்கும் சென்னிமலைக்கும் இடையே மைசூர் வரிப்பணத்தைக் கைப்பற்றிய நிகழ்வால் வந்தது, திப்பு வழங்கியதல்ல; அவர் 1805 ஜூலை 31 அன்று சங்ககிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார். எனவே (2), (4) தவறு.

**41. (C) [A] மற்றும் [R] இரண்டும் சரி; [R] என்பது [A]-க்கான சரியான விளக்கம்**

கப்ப நிலுவை காரணமாக இராமநாதபுரம் ஆட்சியர் ஜாக்சன் 1798-ல் கட்டபொம்மனை இராமநாதபுரத்திற்கு வரவழைத்தார்; எனவே காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.

**42. (C) (1) மற்றும் (3) தவறு**

பானர்மேனின் இறுதி எச்சரிக்கை 1799 செப்டம்பர் 1 அன்று விடுக்கப்பட்டது (1798 அல்ல); கயத்தாற்றில் விசாரணை 1799 அக்டோபர் 16 அன்று நடந்தது (செப்டம்பர் அல்ல). எனவே (1), (3) தவறு.

**43.** **(D) பொன்னாத்தாள்**

மருது சகோதரர்களின் தந்தை உடையார் சேர்வை (மூக்கையா பழனியப்பன்), தாய் பொன்னாத்தாள் ஆவார்.

**44.** **(C) (I), (II) மற்றும் (III)**

கட்டபொம்மன் 1799 அக்டோபர் 16, ஊமைத்துரை 1801 நவம்பர் 16, மருது சகோதரர்கள் 1801 அக்டோபர் 24 அன்று தூக்கிலிடப்பட்டனர்; தீரன் சின்னமலை தூக்கிலிடப்பட்டது 1805 ஜூலை 31, 1806 அல்ல.

**45.** **(B) கூற்று, காரணம் இரண்டும் சரி, மற்றும் காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

தென்னிந்தியப் புரட்சியின் போது கைதான முகமது ஹாசம், சதித்திட்ட விவரங்களைப் பெற ஆங்கிலேயர் துன்புறுத்தியதால், கடிதங்களை அழித்துத் தற்கொலை செய்து முதல் தியாகியானார்; எனவே காரணம் கூற்றை விளக்குகிறது.

**46.** **(B) (ii) மற்றும் (iii) மட்டும்**

தூண்டாஜி வாக் மைசூர்–கர்நாடகப் பகுதியைச் சேர்ந்த மராட்டியத் தலைவர்; மருது சகோதரர்கள் சிவகங்கையைச் சேர்ந்தவர்கள். எனவே (ii), (iii) தவறான இணைகள்.

**47.** **(D) (4), (3), (2), (1)**

தென்னிந்தியப் புரட்சி (1800–01), வேலூர் கலகம் (1806), சிப்பாய் கலகம் (1857), சட்ட மறுப்பு இயக்கம் (1930) என்பதே கால வரிசை.

**48.** **(C) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி மற்றும் காரணம் [R] என்பது கூற்று [A] இன் சரியான விளக்கம்**

கட்டபொம்மனின் சகோதரர் ஊமைத்துரை பாளையங்கோட்டை சிறையிலிருந்து தப்பி வந்தபோது சின்ன மருது அவருக்கு அடைக்கலம் அளித்தார்; இதனால் 1801-ல் ஆங்கிலேயர் பெரும் படையுடன் சிவகங்கையைத் தாக்கினர். எனவே காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம்.

**49.** **(C) (i) மற்றும் (ii) மட்டும் சரி**

தீரன் சின்னமலை 1801-ல் காவிரிக்கரையிலும், 1802-ல் ஓடாநிலையிலும், 1804-ல் அரச்சலூரிலும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். அரச்சலூர் போர் 1806 அல்ல, எனவே (iii) தவறு.

**50.** **(A) 2 4 1 3**

யூசுப் கான் (மருதநாயகம்) மதுரை ஆளுநர்; ஜார்ஜ் பிகாட் சென்னை (மெட்ராஸ்) ஆளுநர்; புலித்தேவர் நெல்கட்டும்செவல் பாளையக்காரர்; வேலுநாச்சியார் ராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து சேதுபதியின் மகள்.

**51.** **(C) (ii) மற்றும் (iii) சரி**

1798 மே 31 வரை பாஞ்சாலங்குறிச்சியின் நிலுவை 3310 பகோடாக்கள் (3510 அல்ல). ஜாக்சன் நீக்கப்பட்டு எஸ்.ஆர். லஷிங்டன் நியமிக்கப்பட்டார். கட்டபொம்மனைக் கலப்பூர் காட்டில் பிடித்து ஒப்படைத்தவர் புதுக்கோட்டை மன்னர் விஜய ரகுநாத தொண்டைமான், சாத்தூர் பாளையக்காரர் அல்ல.

**52.** **(D) கலெக்டர் ஜாக்சன், தன்னை அவமானப்படுத்திவிட்டதாக வீரபாண்டிய கட்டபொம்மன் எழுதிய கடிதத்திற்கு எட்வர்ட் கிளைவ் ஆர்வம் காட்டவில்லை**

கட்டபொம்மனின் கடிதத்தைப் பெற்ற எட்வர்ட் கிளைவ் விசாரணைக் குழுவை அமைத்து, ஜாக்சனைப் பதவியிலிருந்து நீக்கினார்; எனவே அவர் ஆர்வம் காட்டவில்லை என்பது தவறு. கர்நாடக இணைப்பு (1801), பாளையக்கார முறை ஒழிப்பு, சென்னை உச்ச நீதிமன்றம் (1801) ஆகியவை அவரது காலத்தவை.

**53. (A) மங்கலேஸ்வரி நாச்சியார்**

முத்துராமலிங்க சேதுபதி கம்பெனியால் பதவி நீக்கப்பட்ட பின், நிரந்தர நிலவரித் திட்டத்தின்படி அவரது சகோதரி மங்கலேஸ்வரி நாச்சியார் ராமநாதபுரம் ஜமீன்தாராக நியமிக்கப்பட்டார்.

**54. (B) 2 4 1 3**

பூலித்தேவனை எதிர்த்தவர் கர்னல் ஹெரான்; கட்டபொம்மனை எதிர்த்தவர் மேஜர் பானர்மேன்; ஊமைத்துரையை எதிர்த்தவர் கர்னல் மெக்காலே; தீரன் சின்னமலையை எதிர்த்தவர் ஹாரிஸ்.

**55. (D) (i), (ii) மற்றும் (iii)**

தீரன் சின்னமலை கொங்கு நாட்டுப் பாளையக்காரர்; திப்பு சுல்தான் மற்றும் பிரெஞ்சுக்காரர்களிடம் போர்ப் பயிற்சி பெற்றார்; 1802-ல் ஓடாநிலையில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். எனவே மூன்று கூற்றுகளும் சரி.

**56. (D) (1) மற்றும் (3)**

பாளையக்காரர் முறை 1529-ல் விஸ்வநாத நாயக்கர் காலத்தில் தோன்றியது (1585 அல்ல); கட்டபொம்மன் 1799 அக்டோபர் 16 அன்று கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார் (1789 அல்ல). எனவே (1), (3) தவறு.